# பண்டைத் தமிழரின் பண்பாட்டுப் பரிமாற்றங்களும் வணிக வாயில்களும் ஆய்வுச்சுருக்கம்

**[1]க ஜான்சி ராணி,** முனைவர் பட்ட ஆய்வாளர்
https://orcid.org/0009-0003-4380-7621, jancy_res@maher.ac.in
**[*]அ முனைவர் க அமலா கார்த்திகா**, உதவிப் பேராசிரியர்
https://orcid.org/0000-0002-2746-3035, gamalakarthiga@maherfhs.ac.in
*1தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலை பல்கலைக் கழகம், சென்னை-78.

பழந்தமிழரின் வாழ்க்கை முறையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றன. சங்க காலத் தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களில் இயற்கையோடு பொருந்திச் சூழ்நிலைக்கேற்றத் தொழில்களை உடையவராய் ஒருவருக்கொருவர் வணிக முறையில் பண்டமாற்றும் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர். அது போலவே இத்தமிழர்கள் தம் நிலத்தில் விளைந்த பொருட்களைப் பிற திணை மக்களிடம் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வந்துள்ளனர். இப்பொருள்களின் பரிமாற்றங்கள் பண்டமாற்று முறையாக மாறியது. இதுவே, வணிகத்தின் தொடக்கமாக அமைகிறது. இத்தொடக்கம் உள்நாட்டுக் கடல் வணிகமாகவும், பன்னாட்டு உலகக் கடல் வணிகமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வணிகச் செயலுக்காகத் தமிழர்கள் கடல் கடந்து வணிகம் செய்துள்ளனர். இத்தொடர் வளர்ச்சியால் பண்டமாற்று முறை நெய்தல் நிலப்பகுதிகளில் நிகழ்ந்திருப்பதையும், கடல் வணிகம் தொடங்குவதையும் ஆராயும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் நெய்தல் என்பது ஒரு திணையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அது கடலையும், கடல் சார்ந்த பகுதியையும் குறிக்கிறது. அங்கு வாழும் மக்களுக்கு உப்பும், மீனும் கிடைக்கும் பண்டங்களாக அமைந்துள்ளது. தமிழர்கள் இவற்றை பண்டமாற்றம் செய்து, தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வர். கடல் வாழ்வைத் தனி வாழ்வாகக் கண்டவர்கள் தமிழர்களாவர். இக்கடலுடன் மக்கள் உறவு கொள்ளும் மனப்பான்மையும், தேவையும் உருவான போது வணிகப் போக்கு உருவானது. இதைத் தொடர்ந்து கடல் கடந்து குடியேறும் வழக்கம் காணப்பட்டது. இதுவே வணிகத்தின் தொடக்கம் எனலாம். இவ்வணிகத்தின் தொடக்கமாக இலக்கிய வளர்ச்சியையும், ஐந்திணையாக்கியும் கடல் வாழ்வைப் பெற்றவன் நம் தமிழன் என்று உரைக்கலாம். அது போலவே தமிழ் நாட்டிலிருந்து மேலை நாட்டுக்கும், கீழை நாட்டுக்கும் கடல் வணிகம் இருந்திருப்பதை அறியமுடிகிறது. இவ்விருநாட்டிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறையில் இருப்பதை இன்றும் அறியலாம். அதே போல் யவனர் என்று

அழைக்கப்படும் கிரேக்க, ரோமானியர்கள் கடல் கடந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இக்கடல் வணிகம் உள்நாட்டவரும், அயல் நாட்டவரும் புலம் பெயரக் காரணமாக அமைந்துள்ளது. கடல் வணிகம், வணிக வளர்ச்சியையும், பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் உருவாக்கியது என்பதையே இவ்வாய்வு எடுத்து இயம்புகிறது.

**உலக வரலாற்றில் வணிகத் தோற்றம்**

தீவுகளில் வசிப்பவர்கள் தாம் கடலுடன் உறவு கொள்ளும் மனப்பான்மை பெற்றவர்கள் என்பது உலகில் காணும் பொதுவான எண்ணமாகும். இப்போக்கில் மேலை நாட்டில் கடல் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் கடலைக் கடந்து பழந்தமிழகத்திற்கும், பிற நாடுகளுக்கு சென்று குடியேறிப் பல நாடுகளை வென்று ஆட்சியையும், வணிகத்தையும் நிலை நாட்டியுள்ளனர். பழந்தமிழகத்தின் வரலாற்றனாது பண்டைய எகிப்து, பாபிலோனியா, சுமேரியா, ரோம், கிரீசு ஆகிய சீனா நாடுகளின் வரலாற்றுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

எகிப்திய, ரோமானிய நாகரிகக் காலங்களில் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யக் களிமண் தகடுகளைப் பயன்படுத்தினார்கள். பழங்காலத் தமிழர்கள் ஏட்டுச்சுவடிகள் மூலம் இலக்கியப் பதிவுகளைச் செய்துள்ளனர். இதுவே சங்க இலக்கியம் தோன்றுவதற்கு மூலமாக இருந்துள்ளது. தமிழர் வரலாற்றில் மன்னர்கள் ஆட்சியும், மக்கள் வாழ்வும், கடல் பயணத்திற்கும், போருக்கும், வணிகத்திற்கும், கடல் சார்ந்த உணவுப் பொருள் உற்பத்திக்கும் பயன்பட்டுள்ளனர். கடலில் கலங்களின் மூலம் போரும், வணிகமும் செய்ததைச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் முதலான இலக்கியங்களில் காண முடிகிறது. இத்தமிழ் மரபில் வந்த பாரதியார்

**“மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம்**
**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்”**[1]

என்று பாடியுள்ளார்.

**தமிழர் யவனர் வணிகத் தொடர்பு**

சங்க இலக்கியங்களும், தொல்பொருள் ஆய்வுகளும், கல்வெட்டுகளும் அயல் நாட்டவர்களின் குறிப்புகளும் தமிழர் யவனருடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பற்றிக் குறிப்பிடுகின்றன. இதனால் தமிழர்களின் நாகரிகத்தையும், ரோம், கிரேக்கம் போன்ற மேலை நாடுகளுடன் கொண்ட வணிகத் தொடர்பையும் நன்கு அறியலாம். தமிழகத்தில் சில இடங்களில் ரோமபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியில் கி.பி முதல் இரண்டாம் நூற்றாண்டு ரோமபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. அந்நூற்றாண்டுகளில் தமிழகத்துக்கும், ரோமாபுரிக்கும் இடையே நடைபெற்று வந்த செழிப்பான வாணிகத்துக்குச் சான்றுகள் அளித்துள்ளன. இவ்வாணிகத்தைப் பற்றிய சில அரிய செய்திகளை செங்கடல் வழிகாட்டி **(Periplus of the Eythraean Sea)** என்னும் கிரேக்க நூலின் மூலம் அறியலாம்.

முசிறி என்னும் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினத்தில், யவனர்களின் மரக்கலன்கள் பொன்னைக் கொண்டு வந்து கொட்டி விட்டு அதற்கு விலையாக மிளகு மூட்டைகளை ஏற்றுச் செல்வதாக அகநானூறு குறிப்பிடுகிறது. இதனை,

**“யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்த கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி ஆர்ப்பு”**[2] **(அகம்:149 7-11)**

பொற்கரைகளோடு மிளகுப் பொதிகளோடு மீண்டு செல்லும் வாணிக வளம் மிக்கது முசிறி துறைமுகம் என்பதைக் காணலாம்.

தமிழ்நாட்டில் மக்கள் மண்ணால் செய்த அகல் விளக்கையும், இரும்பால் செய்த விளக்கையும் பயன்படுத்தியுள்ளனர். யவனர் நாட்டிலிருந்து வந்த அன்னப் பறவையின் உருவம் பொறித்த ஓதிம விளக்கையும், பொன் வடிவமாக அமைந்த பாவை விளக்கையும் பயன்படுத்தியதாக நெடுநல்வாடை குறிப்பிடுவதை நாம் அறியலாம். இதனை,

**“யவனர் இயற்றிய வினைமாண் பாவை”** [3] **(நெடுநல்வாடை :101)**

என்று குறிப்பிடுகிறது. அதே போல் ரோமானியர்கள் யானைகளை இறக்குமதி செய்து அரசர்களின் தேரை இழுக்கப் பயன்படுத்தியுள்ளார்கள். தங்களின் கருவிகள், வேலைப்பாடு நிறைந்த அணிகலன்கள் ஆகியவற்றைச் செய்துள்ளனர்.

கிரேக்க நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்குப் பொருள்கள் மட்டுமின்றித் தமிழ்ச் சொற்களும் சென்றுள்ளன. கிரேக்க நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த மதுவும், பாவை விளக்கும் இறக்குமதிப் பொருள்களைப் பண்டமாற்றுச் செய்திருப்பதை அறியலாம். அது போலவே எகிப்து நாட்டுக்குத் தமிழர்கள் கடல் வணிகம் செய்துள்ளனர். எகிப்து நாட்டின் நறுமணப் பொருட்கள் சேர நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்ததை எகிப்து நாட்டுக் கல்வெட்டுகளில் மகாராணி கிளியோபாட்ரா தமிழ் நாட்டின் விலை உயர்ந்த முத்து மாலையை அணிந்திருந்ததாக அறிய முடிகிறது.

**பண்ட மாற்றும் முறை**

சங்ககாலத் தமிழர் தமக்குத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலியப் பொருள்களைப் பணம் கொடுத்து வாங்காமல் தத்தம் நிலத்தில் விளையும் பொருள்களைக் கொடுத்துப் பண்டமாற்று செய்து கொண்டார்கள். இதுவே, வணிகத்தின் தொடக்க நிலையாகும். ஆறும், கடலும் ஒன்றாகக் கடக்கும் இடம் முன்துறையாகும். முன்துறையில் மரக்கலங்களும், நாவாய்களும், தோணிகளும், படகுகளும் நின்றன. அதில் நீரின் வழியாகவும், நிலத்தின் வழியாகவும் வந்த பொருள்கள் மரக்கலங்களிலும் தோணிகளிலும் நாவாய்களிலும் ஏற்பட்டுக் கடல் வழியாக அயல் நாட்டுகளுக்குச் சென்றன. அயல் நாடுகளில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த நாவாய்கள் முன்துறையில் நங்கூரம் பாய்ச்சி நின்றன. அவற்றில் ஏற்றி வரப்பட்ட குதிரைகள், தங்கம், தேறல் (மது வகைகள்), பல்வேறு பட்டு துணிகள் முதலியன இறக்குமதி செய்யப்பட்டன.

மேலும் பெருந்துறையில் இறக்கப்பட்டப் பொருள்கள் சுங்கம் செலுத்திய பின்னர் முத்திரையிட்டு வெளியே அனுப்பப்பட்டன.

சங்க காலத்தில் பண்டமாற்றும் முறை இருந்தாலும் அதிக விலையுள்ள பொருள்களைக் காசு கொடுத்து வாங்கும் நிலையும் உருவாகிவிட்டது. காரணம் சங்க காலத்தில் கிரேக்க ரோமானியர்களான யவனர்களின் கடல் வணிகத்தால் தங்கக்காசுகள், வெள்ளிக்காசுகள் தமிழகத்துக்குள் அதிகமாகப் புழங்கின. இதனைத் தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகள் மூலம் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் யவனக்காசுகள் கிடைத்திருப்பதை நம்மால் உறுதி செய்யமுடிகிறது.

**நெய்தல் திணை வழி உற்பத்தியாகும் பொருட்கள்**

ஐவகை நில மக்களின் வழியாகப் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதை நம் அறியலாம். அவை நில வழியாக இரத்தினம், பவளம், விலை உயர்ந்த கற்கள் போன்றவை கிடைத்துள்ளன. அதே போல் காடுகளிலிருந்து தேக்கு, அகில், சந்தனம், கருங்காலி என்னும் பலவகை உயர்ந்த தரமிக்க மரங்கள் கிடைத்துள்ளன. அதைத் தொடர்ந்து நெய்தல் நிலத்திலிருந்து கடல் வாழ் உயிரினங்கள் மீன்கள், அரிய வகை உயிரினங்கள், கடற்பாசிகள் உயர்வகை முத்துக்கள் ஆகியவை கிடைத்துள்ளன. மருத நிலத்திலிருந்து அரிசி, தானியங்கள், வேளாண் உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு பண்டமாற்று முறையில் வணிகம் நடைபெற்று இருப்பதை அறிய முடிகிறது.

**திணை வழி ஏற்றுமதி**

ஐவகை நிலத்தில் வாழ்கிற மக்கள் தங்களுக்கிடையே இருந்த பொருள்களைப் பண்டமாற்றுச் செய்தும் வணிகம் அமைத்தும் வாழ்ந்து வந்தனர். அந்நிலங்களில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் மலைப்பகுதியில் கிடைக்கப் பெற்றத் தேன், தோல் பொருட்கள், எண்ணெய் வகைகள், வேர்கள், மரப்பட்டைகள், மூலிகைகள், பூக்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து வந்தனர். கடற்கரை ஓரங்களில் வசித்த நெய்தல் நில மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் அழைப்பதுண்டு. இவர்கள் கட்டு மரங்களிலும், படகுகளிலும் கடலில் சென்று வலை வீசி மீன் பிடித்து அந்த மீன்களைப் பண்டமாற்று முறையில் விற்று வாழ்ந்து வந்தார்கள் என்பதை தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடுவதைக் காணலாம். தமிழரின் கடல் வணிகமும் பண்பாடும் என்ற நூலில் மயிலை சீனி வேங்கடசாமி என்பவர் ஐந்து வகை வணிகத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். இதனை,

1. **பண்டமாற்று முறை வணிகம்**
2. **தரை வணிகம்**
3. **கரையோர வணிகம்**
4. **கடல் வணிகம்**
5. **நடுக்கடல் வணிகம்**

எனப் பல்வகை வணிக முறைமைகளைக் கையாண்டு, வணிகத்தைப் பெருக்கியுள்ளமையை அறியலாம்.

**கள்ளும் குறிஞ்சிநிலப் பொருட்களும்**

பழந்தமிழகத்தில் வாழ்ந்த அனைத்து நில மக்களின் இன்றியமையாத பானமாக கள் விளங்கியது. ஆண், பெண் என்ற பாகுபாடின்றி இருபாலாரும் மதுவினைக் குடித்து மகிழ்ந்துள்ளனர். **"தமிழில் மது வகைளைக் குறிக்க அறுபது பெயர்கள் வரியில் காணப்படுகின்றன"** என ந.சி. கந்தையா பிள்ளை கூறுகிறார். தென்னை அல்லது பனை பாளைகளைச் சீவி அதிலிருந்து வடியும் நீர்மத்தை மட்பாண்டத்தில் சேகரித்து அதனைப் பிளிக்க வைத்து அருந்தப்படும் பானம் 'கள்' எனப்பட்டது. சங்க இலக்கியப் பாடல்களில் கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள. பானம் தென்னங்கள்ளையே குறிப்பதாகத் தோன்றுகிறது. கள் என்னும் சொல் வெறிநீர், பதநீர் (தெளிவு அல்லது பழஞ்சாறு), மட்டு (சர்பத்து) தேன் என்னும் நால்வகையையுங் குறிக்கும் எனப் பாவாணர் கூறுவர்.

**நெய்தல் பண்டமாற்று முறை**

கடற்கரை சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நில மக்கள் உப்பைத் தயாரித்து அதை உப்பு வணிகர் மாட்டு வண்டிகளில் நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, உப்பை மாற்றிக் கொண்டதாக நற்றிணையில்,

**"தன் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிற நாட்டு உப்பின் கொள்கை சாற்றி நெடு**
**நெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி அவண் உறை**
**முனிந்த ஒக்கலொடு புலம் பெயர்ந்து உமணர் போகலும்**
**இன்னாதாகும்"4 (நற்:183)**

என்ற பாடலில் மலைவாழ் மக்கள் தன் நாட்டில் விளைந்த நெல்லைத் தந்து, பிற நாட்டில் விளைந்த உப்பைப் பண்டமாற்றுச் செய்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இச்சூழலில் இவர்களின் சுற்றத்தாரும் சேர்ந்து சில காலமே உமணர் வாழ்ந்தாலும், அவர்கள் பிரிந்து செல்வது என்பது மலைவாழ் நபருக்குத் துன்பமாகத் தான் இருக்கும் என்பதையும், அங்கு தலைவி வாடைக் காற்றினால் துன்புறும் செய்தியையும் பண்டமாற்றத்தின் மூலம் அறிய முடிகிறது.

**வணிகர் பண்பு**

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் உலக நன்மைக்காகவே நடந்து வந்தது. பொருள் ஈட்டுவது என்னும் கருத்தால் மட்டும் அவர் இத்தொழிலை நடத்தவில்லை. பல இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்திற் கொண்டு வந்து குவித்து, அப்பண்டங்கள் கிடைக்காத வேறிடங்களுக்கு அவற்றை அனுப்பி நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்க அவர்கள் வழி தேடினர். வணிகர்களின் பண்பினைப் பட்டினப் பாலையின் மூலம் அறியலாம். இதனை,

**"நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவு மொப்ப நாடிக்**
**கொள்வதூஉ மிகை கொளாது**
**கொடுப்பதூ உம் குறைபடாது"5** **(பட்டின:206-210)** என்ற பாடல் வணிகரின் குடிச்சிறப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**வாணிகத் தொடர் பின் மூலம் மொழி பரிமாற்றம்**

கி.மு. பத்தாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாடு, சிரியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்புக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டின் மணம் பரப்பும் சந்தனம், ஆங்கிலத்தில் சந்தல் **(sandal)** ஆனது. அதே போல் மயிலை ஆகு பெயரால் உணர்த்தும் **'தோகை'** என்ற சொல் **'துக்கி' (thukki)** என்று ஹீப்ரு மொழியில் வழங்குகிறது எனலாம்.

தமிழில் **'அரிசி'** என்பது கிரேக்கத்தில் **'ஒரிசி'** எனவும், கறுவாய் என்பது **'கற்பியன்'** எனவும், இஞ்சிவேர் என்பது **'சிக்கி பெரோசு'** எனவும், **'பப்பியிலிருந்து' 'பெப்பரி'** எனவும், பெயர்ந்துச் சென்ற மொழிகளாகும். கிறிஸ்து அப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவுடன் நடைபெற்ற தென்னிந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் பல கிட்டியுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை உரோமை வல்லரசர் ஸ்டிராபோவின் விவரணம், **சுமார் கி.பி. 60இல்** தோன்யுள்ள **'பெரிபுளூஸ்'** என்னும் நூல், பிளினியின் **'இயற்கை வரலாறு' (சுமார் கி.பி. 77),** தாலமியின் **'பூகோள விவரணம்' (சுமார் கி.பி.170)** என்னும் நூல்களாகும். இவ்வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள் சங்க நூல்கள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மனிதன் முதன் முதலாகப் பண்டமாற்றம் செய்து வணிகத்தில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தான். அதன் பிறகு பணம் கொடுத்து வாங்கும் முறை ஏற்பட்டது. இப்பண்டமாற்றின் மூலமாகவும், நாணயமாற்றின் வழியாகவும் வணிகம் செய்து வாழ்ந்தான். அதில் தரை வாணிகத்தையும் மற்றும் கடல் வாணிகத்தின் மூலம் கலம் செலுத்தி வணிகம் நடத்தி இருப்பதை நம் அறியலாம். இவற்றில் கடல் வாணிபத்தின் மூலம் கலாச்சாரத் தொடர்புகள் வளர்ந்தன. அதே போல் துறைமுகங்களும், நாட்டின் பொருளாதாரமும் வணிகர்களால் பெருகி வந்திருப்பதையும் அறிய முடிகிறது. இவ்வாணிகத் தொடர்பு மூலம் மொழிப் பரிமாற்றம் நிகழ்ந்து இருப்பதை அறியமுடிகிறது. தமிழர்கள் தன்னிட்த்திலேயே பொருள்கள் தேங்கிக்கிடக்காதபடி அவற்றில் பிற்ரோடு பகிர்ந்து வாழ்ந்துள்ள பண்பு நலத்தைக் காணமுடிகிறது. தமிழகத்தில் கடற்கரையொட்டி இருக்கும் நகரங்கள் பன்னாட்டு வணிகத் தொடர்புகளை இக்காலத்தும் நடைப்பெற்று வருவது மிகவும் போற்றத்தக்கது.

**துணைநின்ற நூல்கள்**

1. கு. வெ. பாலசுப்பிரமணியன். நற்றிணை மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதல் பதிப்பு, 2004.
2. சி. பாலசுப்பிரமணியன். தமிழ் இலக்கிய வரலாறு. மணமலர்ப் பதிப்பகம், இருப்பத்தி ஏழாம் பதிப்பு, 1998.
3. பெ. சுபாசு சந்திரபோசு. தமிழரின் கடல் வணிகமும் பண்பாடும். அன்னம் வெளியீடு, முதற் பதிப்பு, 2017.
4. மு. சண்முகம் பிள்ளை. சங்கத் தமிழர் வாழ்வியல். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 1997.
5. ஷா. முஹம்மது அஸ்ரின். “பழந்தமிழ் நாட்டில் பண்டமாற்று முறை வணிகம்”. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி. 6, மலர். 1, ஜூலை 2023, (பக். 163 – 179).